දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்விநிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

# பொதுக்கலைமானித் தேர்வு (வெளிவாரி)- 2017

## ECG 1 பொருளியல் I (பழைய பாடத்திட்டம்)

**அறிவுறுத்தல்கள்:**

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து (05)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
- இவ்வினாத்தாளில் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆகும்
- ஒவ்வொரு வினாவுக்கும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன
- வரைபடத்தாள்கள் வழங்கப்படும், கணிப்பான்கள் அனுமதிக்கப்பட்டுகின்றன.
- ஒதுக்கப்பட்ட நேரம்: **மூன்று (03)** மணித்தியாலயங்கள்

---

### பகுதி I

**1.** (i) எண்மானப்பயன் அணுகுமுறைக்கும் சமப்பயன் அணுகுமுறைக்கும் இடையிலான அடிப்படை வேறுபாட்டினை அடையாளம் காண்க. (10 புள்ளிகள்)

(ii) "எல்லைப்பயன்" என்பதன் அர்த்தத்தினை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) மொத்தப்பயனுக்கும் எல்லைப்பயனுக்கும் இடையிலான தொடர்பு யாது? வரைபடரீதியாகக் காண்பிக்குக. (05 புள்ளிகள்)

2. (i) உற்பத்திச்சார்பினை வரையறுக்குக. (04 புள்ளிகள்)

(ii) ஒரு நிறுவனத்தினுடைய உற்பத்திச்சார்புக்கும் செலவுக்கட்டமைப்புக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக. (08 புள்ளிகள்)

(iii) நிறுவனத்தின் உற்பத்திச்சார்பு மற்றும் செலவுக்கட்டமைப்பின் மீது தொழில்நுட்ப மேம்பாட்டினைப் பயன்படுத்துவதன் விளைவினை விளக்குக. (08 புள்ளிகள்)

3. (i) உச்சவிலைக் கட்டுப்பாடு மற்றும் இழிவுவிலைக் கட்டுப்பாடுகளை விதிப்பதன் நோக்கங்களினை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) எந்தச் சூழ்நிலையில் உச்சவிலை மற்றும் இழிவுவிலை என்பன வினைத்திறனற்றவையாகக் காணப்படும் என்பதை விளக்குக. (10 புள்ளிகள்)

4. மாதாந்தம் 36.00 ரூபா வருமானத்தைக் கொண்ட ஒரு நுகவோன் X, Y என்னும் இரண்டு பொருட்களை வாங்க விரும்புகிறான். X, Y ஆகிய பொருட்களின் மொத்தப்பயன் சார்புகள் முறையே பின்வரும் சமன்பாடுகளால் தரப்பட்டுள்ளன.

$$TU_x = 50Q_x - 5Q_x^2$$
$$TU_y = 32Q_y - 4Q_y^2$$

X பொருளின் விலை ரூபா 5.00 எனவும் Y பொருளின் விலை ரூபா 8.00 எனவும் எடுகோள் கொள்க

(i) X, Y ஆகிய இரு பண்டங்களுக்குமான நுகர்வோனுடைய சமனிலைக் கொள்வனவுத் தொகைகளைக் கணிப்பிடுக. (06 புள்ளிகள்)

(ii) இச்சமனிலையின் அர்த்தத்தினை நீர் எவ்வாறு விளக்குவீர்? (04 புள்ளிகள்)

(iii) பணத்தின் எல்லைப்பயனைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) ஏனையவை மாறாதுள்ளபோது, X பொருளின் விலை ரூபா 2.00 இனால் அதிகரித்துள்ளது எனக்கருதுக. இந்நுகர்வோனின் புதிய சமனிலைக் கொள்வனவுத் தொகைகள் என்னவாக இருக்க வேண்டும்? (06 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றுள் எவையேனும் **நான்கிற்கு** சுருக்க குறிப்புக்கள் எழுதுக:

(i) சாதாரண பண்டங்களுக்கான விலைமாற்றத்தின் வருமானவிளைவும் பதிலீட்டு விளைவும்.

(ii) ஒரு நிறைபோட்டி நிறுவனத்தின் சமனிலை நிபந்தனையைத் தருவித்தல்

(iii) ஒரு நிறுவனத்தின் குறைந்து செல்லும் எல்லை உற்பத்தி

(iv) அளவுத்திட்ட சிக்கனங்கள் (Economies of scale)

(v) விலை நுகர்ச்சி வளையி

(தலா 05 புள்ளிகள்)

## பகுதி II

6. ஒரு திறந்த பொருளாதாரம் தொடர்பான பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்பட்டுள்ளன (எல்லா பெறுமதிகளும் மில்லியன் ரூபாவில்)

நுகர்வுச்சார்பு : $C = 200 + 0.75\,Y^d$

தனியார் முதலீடு : $I = 250$

அரசாங்க செலவீடு : $G = 200$

ஏற்றுமதிகள் : $X = 50$

நேர் வரிச்சார்பு : $T = 0.25Y$

(i) இப் பொருளாதாரத்தின் சமநிலைத் தேசியவருமான மட்டத்தினை நிர்ணயிக்குக. (05 புள்ளிகள்)

(ii) இப் பொருளாதாரத்தின் வருமானப்பெருக்கியினை மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii) தற்பொழுது இப்பொருளாரத்தில் இறக்குமதிப் பொருட்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதோடு இறக்குமதிச் சார்பு பின்வருமாறு தரப்பட்டுள்ள தாகக் கருதுக.

இறக்குமதிச்சார்பு: $M = \frac{1}{16}Y$

பொருளாதாரத்தின் புதிய சமநிலைத் தேசிய வருமான மட்டத்தினைக் கணிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iv) புதிய சமனிலையில் வர்த்தக நிலுவையின் அளவினைக் கணிப்பிடுக. (05 புள்ளிகள்)

7. (i) உராய்வு மற்றும் அமைப்புரீதியான வேலையின்மைகளுக்கிடையிலான வேறுபாடுகள் (10 புள்ளிகள்)

(ii) வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதில் இலங்கைப் பொருளாதாரத்தில் எத்தகைய அமைப்புரீதியான பிரச்சினைகளை நீர் அடையாளம் செய்வீர்? (10 புள்ளிகள்)

8. (i) ஒரு நாட்டினுடைய பணநிரம்பலை பரிசீலனை செய்வதில் "விரிந்த பணம்" என்ற எண்ணக்கருவின் முக்கியத்துவம் குறித்து ஆராய்க. (05 புள்ளிகள்)

(ii) பணப்பெருக்கி என்ற எண்ணக்கருவினைக் கவனத்தில் கொண்டு, பணநிரம்பல் மீது பின்வருவனவற்றின் தாக்கங்களை விளக்குக.

அ. மத்தியவங்கியின் பகிரங்க சந்தை நடவடிக்கைக் கொள்கை

ஆ. மத்தியவங்கியின் கழிவுவீதக் கொள்கை

இ. மத்தியவங்கியின் சட்டரீதியான ஒதுக்கு தேவைப்பாடுகள் (தலா 05 புள்ளிகள்)

9. (i) சர்வதேச வர்த்தகம் தொடர்பான ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாட்டினை சுருக்கமாக விளக்குவதுடன், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு அதன் பொருத்தப்பாட்டுத் தன்மை குறித்துக் கருத்துரைக்குக. (12 புள்ளிகள்)

(ii) நிலையான நாணயமாற்றுவீத முறையின் நன்மை மற்றும் தீமைகளை சுருக்கமாக குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

10. பின்வருவனவற்றுள் எவையேனும் **நான்கிற்கு** சுருக்க குறிப்புக்கள் எழுதுக:

(i) பணத்துக்கான கேள்வியின் நோக்கங்கள்

(ii) ஒரு நாணயத்தின் பெறுமதி இறக்கமும் பெறுமதித் தேய்வும்

(iii) பிலிப்ஸ் வளையி

(iv) சர்வதேச நாணய நிதியம் (IMF)

(v) சென்மதிநிலுவையின் நடைமுறைக் கணக்கும் மூலதனக் கணக்கும் (தலா 05 புள்ளிகள்)

---

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

# பொதுக்கலை மாணி (வெளிவாரி)ப் பரீட்சை (டிசம்பர் 2017)

## பொருளியல் II
## ECG 2 ஒப்பீட்டுப் பொருளாதார அபிவிருத்தி

எவையேனும் **ஐந்து** (05) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
இவ்வினாத்தாளில் உள்ள மொத்த வினாக்களின் எண்ணிக்கை 08.
ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகள், அதற்கேற்ப, குறிப்பிடப்பட்டுள்ளன
(நேரம்: மூன்று மணித்தியாலங்கள்))

1. பெரிய பிரித்தானியாவில் மனர்பண்ணை முறையின் வீழ்ச்சிக்கு, வர்த்தகத்தின் விரிவாக்கம், மாற்றுகை முறை (commutation), பிளேக் நோய் (Black Death) என்பன காரணங்களாக அமைந்தன என்ற கருத்தினை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

2. தெரிவு செய்யப்பட்ட ஐரோப்பிய நாடொன்றின் கைத்தொழில் அபிவிருத்தியில், விவசாய முறைமாற்றத்தின் (transformation) முக்கியத்துவத்தினை விளக்குக. (20 புள்ளிகள்)

3. "கைத்தொழில் புரட்சி என்ற பதமானது, ஒரு சடுதியான மாற்றத்தினை அல்லாமல், ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பிலான ஒரு இறுதியான அடிப்படை மாற்றத்தினையே குறித்து நிற்கின்றது". பதினெட்டாம் நூற்றாண்டு மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலான பெரிய பிரித்தானியாவினை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினை ஆராய்க. (20 புள்ளிகள்)

4. பெரிய பிரித்தானியாவினதும், ஐரோப்பாக் கண்டத்தினதும் பொருளாதார அபிவிருத்தியில் அரசின் வகிபாகங்களை ஒப்பிட்டு, வேறுபடுத்துக. (20 புள்ளிகள்)

5. "ஜேர்மனியில், உள்நாட்டுச் சந்தையின் அபிவிருத்திக்குச் 'ஸொல்வரின்' (Zollverein) வழி ஏற்படுத்திக் கொடுத்தது". ஆராய்ந்து கருத்துரைக்குக. (20 புள்ளிகள்)

6. சோவியத் ரஷ்யாவில், லெனின் அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையின் பிரதான அம்சங்களையும், ரஷ்யப் பொருளாதாரத்தில் அது ஏற்படுத்திய தாக்க விளைவுகளையும் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

7. பத்தொன்பதாம் நூற்றாண்டில், பிரான்சில் ஏற்பட்ட சனத்தொகை தொடர்பான பிரதான மாற்றங்களை விபரித்து, அந்நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியில் அவை எத்தகைய தாக்கங்களைக் கொண்டவையாக அமைந்தன என்பதனையும் விளக்குக. (20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினை** பற்றி சிறு குறிப்புக்கள் எழுதுக:
   (i) இரண்டாவது நில அடைப்பு இயக்கம்
   (ii) போர்க்கால கம்யூனிசம்
   (iii) 1815 இன் தானியச் சட்டம்
   (iv) வணிகவாதம்
   (v) அடம்சிமித் அவர்களின் 'கட்புலனாகாத கரம்' என்ற தத்துவம்
   (5 X 4 = 20 புள்ளிகள்)

---

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

# பொதுக்கலை மாணி (வெளிவாரி)ப் பரீட்சை (டிசம்பர் 2017)

## பொருளியல் III
## ECG 3 பிரயோகப் பொருளியல்

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
இவ்வினாத்தாளில் உள்ள மொத்த வினாக்களின் எண்ணிக்கை 10
ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகள், அதற்கேற்ப, குறிப்பிடப்பட்டுள்ளன
(நேரம்: மூன்று மணித்தியாலங்கள்)

1. (அ) 1977 இலும் 2005 இலும் இலங்கையில் அமுற்படுத்தப்பட்ட பிரதான பொருளாதாரச் சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

   (ஆ) இச்சீர்திருத்தங்கள் இலங்கையின் வர்த்தக நிலுவை மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் ஆகியவற்றில் எத்தகைய தாக்க விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதனை ஆராய்க. (10 புள்ளிகள்)

2. (அ) இலங்கையில் வறுமையின் பிரதான பண்புகளை விபரிக்குக. (08 புள்ளிகள்)

   (ஆ) இலங்கையில் வறுமையினைக் குறைப்பதற்கு நீர் முன்வைக்கக்கூடிய பரிந்துரைகள் யாவை? விளக்குக. (12 புள்ளிகள்)

3. (அ) "இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதமானது, ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைவிடவும் குறைவானதாகும்". இக் கூற்றினை நீர் ஏற்பீரா? உமது விடைக்குக் காரணங்கள் தருக. (10 புள்ளிகள்)

   (ஆ) சுதந்திரமடைந்த காலத்திலிருந்து, இலங்கையில் சனத்தொகை வளர்ச்சியின் பொருளாதார விளைவுகளைப் பரிசீலனை செய்க. (10 புள்ளிகள்)

4. (அ) 1960 இலிருந்து இலங்கையில் வேலையின்மையின் போக்கினை ஆராய்க. (10 புள்ளிகள்)

   (ஆ) இலங்கையின் வேலையின்மையின் பிரதான பண்புகள் யாவை? (10 புள்ளிகள்)

5. (அ) இலங்கையில் பாதீட்டுப் பற்றாக்குறைகளின் தொடர்ச்சியான அதிகரிப்பிற்கான காரணங்கள் யாவை? (07 புள்ளிகள்)

   (ஆ) இலங்கையில் பாதீட்டுப் பற்றாக்குறைகளை நிதியீட்டம் செய்வதற்கு, அரசாங்க வருமானம் போதாமல் இருந்து வருவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

   (இ) இலங்கையின் பாரிய பாதீட்டுப் பற்றாக்குறைகளின் பேரினப் பொருளாதாரத் தாக்க விளைவுகளை விபரிக்குக. (07 புள்ளிகள்)

6. உள்நாட்டு விவசாயத் துறையினை மேம்படுத்துவதற்கு, சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வந்துள்ள முக்கியமான நடவடிக்கைகள் குறித்து ஆராய்க. (20 புள்ளிகள்)

7. (அ) 1977 இற்குப் பிற்பட்ட, இலங்கையின், கைத்தொழில் கொள்கையினை விபரிக்குக. (08 புள்ளிகள்)

(ஆ) நாட்டின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கட்டமைப்பு என்பவற்றின்மீது இக்கொள்கையின் தாக்கம் குறித்து ஆராய்க. (12 புள்ளிகள்)

8. (அ) இலங்கையில் பெருந்தோட்டத்துறை கொண்டிருக்கும் முக்கியத்துவத்தினைக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(ஆ) 1977 இலிருந்து, இலங்கையின் பெருந்தோட்டத்துறையினால் எதிர்நோக்கப்பட்டு வருகின்ற பிரதான பிரச்சினைகளை ஆராய்க. (14 புள்ளிகள்)

9. 1977 இற்குப் பின்னர், இலங்கையின் சென்மதி நிலுவைப் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

10. இலங்கை தொடர்பாகப் பின்வருவனவற்றுள் எவையேனும் **<u>நான்கினைப்</u>** பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக: (தலா 05 புள்ளிகள்)

(அ) முதியோர் சனத்தொகையினால் ஏற்படும் பிரச்சினைகள்
(ஆ) 1990 க்குப் பின்னர் வருமான ஏற்றத்தாழ்வு
(இ) 1977 இலிருந்து நாணய மாற்று வீதக் கொள்கை
(ஈ) 1977 இற்குப் பின்னர் சமூக நலக் கொள்கை
(உ) 1977 இற்குப் பின்னர் வர்த்தகக் கொள்கை
(ஊ) சென்மதி நிலுவைக் கணக்கின் உள்ளடக்கக் கூறுகள்

---